## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி 2 ம் பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.756/2018

பி.வா.சா.1 தர்மலிங்கம்

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

தாவா சொத்துக்கள் முதலில் கருப்பண்ணகவுண்டருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். கருப்பண்ணகவுண்டர் நல்ல நிலையில் இருந்தபோதே கடந்த 16.02.1982 தேதியில் சொத்துக்களை பொறுத்து உயில் சாசனம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தில் கருப்பண்ணகவுண்டரின் மகன் சொங்கப்பன் என்பவரின் ஆண் வாரிசுக்கு சொத்துக்கள் சேரவேண்டியது என்று நிபந்தனை கண்டு உயில் சாசனம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொங்கப்பன் கடந்த 06.05.2018 தேதியில் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு ஆண்வாரிசுகள் இல்லாத பட்சத்தில் கருப்பண்ணகவுண்டரின் 2 மகள்களுக்கு சொத்துக்கள் சேரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கருப்பண்ணகவுண்டரின் முதல் மகள் உயிருடன் உள்ளார். கருப்பண்ணகவுண்டரின் 2 வது மகள் அருக்காணி என்கிற நாச்சாயம்மாள் என்பவர் திருமணம் ஆகி 2,3 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்படி உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்து 2,3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது. 2,3 ம் பிரதிவாதிகள் அவர்களுக்கு பாகப்பிரிவினை படி ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தான தாவா சொத்தின் ஒரு பகுதியை 6 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதிதான் தற்போது தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை தற்போது 6 ம் பிரதிவாதி அனுபவத்து வருகிறார் என்றும் தாவா சொத்தில் வாதிகளுக்கு

எவ்வித உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரிதான்.

**வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**